**OS No.323/2019**

**DW–1 –ஜெயபிரகாஷ்**

**த/பெ.**

**நாள். 26.02.2026**

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.தாவா சொத்து சம்பந்தப்பட்ட மூன்று லீஸ் டீட்கள் போட்டு இருக்கிறேன். அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்து இருக்கேன் என்றால் தேவைப்பட்டால் ஒப்படைக்க தயாராக இருக்கிறேன். என்னென்ன சொத்து விபரங்கள் போட்டு இருக்கிறேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்று கேட்டால் முடியும் முதலில் ஸ்ரீ குமரன் நிட் பேப் உடன் லீஸ்ட் திடல் இருந்தேன் அதில் நந்த பிரவீன் என்பவர்கள் கொடுத்து இருந்தேன். அது 6000 சதுர அடிக்கு அதற்கு முன்பு 26.06.2014 தேதி அன்று ஸ்ரீ புவனம் நிட் பேப் என்ற நிறுவனத்துடன் லீஸ் ஏற்படுத்தியிருந்தேன் அதில் ஏ.புவனேஸ்வரி என்பவர் உடன் ஐயாயிரம் சதுர அடிக்கு முத்துசாமி என்பவர் வாடகை பத்திரம் ஏற்படுத்தி இருந்தார்.

2. 07.01.2017– தேதியில் ஹேமலதா என்ற நபருக்கு கதவு எண் 25 இருக்கு 2000 சதுர அடி வாடகைக்கு லோட்டஸ் நிட் பேப் என்ற நிறுவனத்துடன் ஏற்படுத்தியிருந்தால் முத்துசாமி என்ற நபர். புவனம் நெட் பேட் உடன் மாத வாடகை 25 ஆயிரம் ரூபாய்க்கும் அதன் பின்பு ஒரு மாதம் கழித்து ஸ்ரீ குமரன் நிட் பேப் 30 ஆயிரம் ரூபாய் வாடகைக்கும் அட்வான்ஸ் 3 லட்சமும் என்று ஒப்பந்தம் எழுதப்பட்டது. பின்பு மூன்றாவதாக லோட்டஸ் நிட் பேப்பருக்கு அட்வான்ஸ் 1 1/2 லட்சமும் வாடகை 20 ஆயிரமும் பேசி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது

3.மேற்சொன்ன லீஸ் அக்ரீமெண்ட்களை வைத்து வங்கியில் கடன் வாங்கி இருக்கிறேன் என்று கேட்டால் ஆமாம். மூன்று லீசு அக்ரீமெண்ட்டுகளும் வெவ்வேறு கதவு எண்களில் அதாவது 25, 17 மற்றும் 17 ஏ என்று தான் ஒப்பந்தம் செய்திருக்கிறேன்.

4. மேற்சொன்ன நிறுவனங்களில் நான் கூட்டாளியாக இருக்கிறேனா என்றால் இல்லை. புவனம் நிட் பேப் நிறுவனத்துடன் தனிப்பட்ட முறையில் புவனேஸ்வரி என்ற நபருடன் தான் நான் லீஸ் அக்ரிமெண்ட் போட்டு இருக்கிறேன். கதவு என் 25–ல் எத்தனை வருடங்களாக வியாபாரம் செய்து வருகிறோம் என்று கேட்டால் கதவு எண் 25–க்கு நான் போகவே இல்லை. கதவு எண் 25ல் போடப்பட்ட லீஸ் அக்ரிமெண்ட் உடன் தான் பேங்க் லோன் வாங்கி இருக்கிறேன் என்று சொன்னால் தவறு.

5. சாட்சி மீண்டும் கதவு எண். 25–ல் தான் நாங்கள் வங்கி கடன் வாங்கினோம் என்றும் ஆனால் கதவு எண். 25–க்கு போக முடியாத சூழல் ஏற்பட்டது என்றும் கூறுகிறார். இந்த விவரங்களை என்னுடைய எதிர்பாரத்திலும் பிரமாண வாக்கு மூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி இருக்கிறேன். லோன் வாங்கிய வங்கியிலும் இந்த விவரத்தை சொல்லியது சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. வங்கியில் வாங்கிய கடன்களை தீர்த்து விட்டேன் என்று சொன்னால் சரிதான். 2014 ஆம் ஆண்டு புவனேஸ்வரி பெயரில் முதல் முதலில் வாடகை ஒப்பந்தம் போட்டுக் கொண்டோம். முதலில் 50hp தான் அந்த கட்டிடத்தில் இருந்தது. நிட்டிங் மிஷின் வைப்பதற்காக தான் வங்கியில் கடன் வாங்கினோம். நிட்டிங் மிஷின் வைக்கும்போது கூடுதல் மின்சாரம் தேவைப்பட்டது என்று சொன்னால் ஆமாம். 2014 ஆம் ஆண்டில் நிட்டிங் மிஷின் வைக்கும் போது புது வயரிங் செய்தோமா என்று கேட்டால் ஆமாம் செய்தோம்.

7. 2017 ஆம் ஆண்டில் ஏற்கனவே இருந்த வயர்கள் கூடுதல் பழு எடுக்கவில்லை என்று சொல்லி நாங்கள் புது வயர்கள் மாற்றினோமா என்றால் அதற்க்கு அவசியம் ஏற்படவில்லை. 2014 ஆம் ஆண்டில் போட்ட வயர்களை வைத்து தான் 2017 கூடுதல் நிட்டிங் மிஷின் வாங்கி வைத்தோம் அதற்கு புதிய வயரிங் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. என்னுடைய புகாரில் பெயர்கள் பழுதாக இருந்ததாகவும் அவை ஏற்கனவே வாடகைக்கு

குடியிருந்தவரால் மாற்றப்பட்டவை என்றும் குறிப்பிட்டு பிரமான பத்திரிக்கையில் சொல்லி உள்ளது போல் புகார் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம்.

8. புகாரில் ஷார்ட் சர்க்யூட் ஆகிவிட்டது அதனால் தான் தீ விபத்து ஏற்பட்டது என்று சொல்லி இருக்கிறேன் என்றால் ஆமாம். நாங்கள் ஏற்கனவே 2014 ஆம் ஆண்டிலேயே வியாபாரம் தொடங்கி விட்டோம் என்றும் 2017 ஆம் ஆண்டில் அதிகம் நிட்டிங் மிஷின் போட்டதால் அதிக பளு எடுக்க முடியாமல் ஏற்கனவே இருந்த வயர்கள் பழுதாகி ஷார்ட் சர்க்யூட் ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

9. லீஸ் தானே காலம் முடிந்தவுடன் கட்டிடத்தை காலி செய்ய வேண்டும் என்று வாதி கேட்டுக் கொண்டாரா என்றால் பாதி சொல்லவில்லை ஆனால் கம்பல் செய்தார். உடனடியாக காலி செய்ய முடியாது என்றும் ஒவ்வொரு நெட்டிங் மிஷின் மிகவும் கனம் வாய்ந்தது சுமார் ரெண்டு டன் இருக்கும் என்பதால் மெதுவாக தான் காலி செய்வோம் என்று கேட்டுக் கொண்டோம். 10.நாங்கள் வைத்திருந்த பெரிய நிட்டிங் மிஷின்களுக்கு மின்சார பளு அதிகமாக வேண்டும் என்று சொன்னால் ஆமாம். எந்த லீஃப் டீடைல் 17 என்ற கதவிற்கு போடப்பட்டிருக்கிறது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் 17 ஏ என்று தான் கொடுத்து இருக்கிறோம் 17 ஏ என்று வரி ரசீது தான் இருக்கிறது. 17 ஏ என்ற கதவு எண்ணிற்கு புவனம் நிட் பேப் உடன் ஒப்பந்தம் போட்டு இருக்கிறோம்

11. புவனம் நிட் பேப் என்ற நிறுவனத்துடன் போட்ட ஒப்பந்த பத்திரத்தில் எங்கும் 17 ஏ என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வரி ரசீதில் தான் 17 ஏ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிறுவனத்தில் வைத்திருந்த மெஷின்கள் அனைத்தும் வங்கியில் ஹைபோத்திகேஷன் செய்யப்பட்டவை.

12. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தின் பாரா எண்.8–ல் சொல்லி உள்ள மிஷின்கள் அனைத்தும் வங்கியில் ஹைபோத்திகேஷன் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரி. இன்னும் அந்த மிஷின்கள் அங்கு தான் இருக்கிறது

என்று சொன்னால் ஆமாம். வாதி தான் அனைத்தையும் பாதுகாத்து வருகிறார் என்று சொன்னால் எங்களை அவர் எடுக்க விடவில்லை. தற்போது வரை அனைத்து மிஷின்களும் அந்த கட்டிடத்தில் அப்படியே தான் இருக்கிறது என்றும் அதனால் நான் வாதிக்கு வாடகை கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

13 நான் என்னுடைய 28.05.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பில் வங்கியில் அனைத்து மிஷின்களும் ஹைபோத்திகேஷன் செய்யப்பட்டு இருப்பதால் வங்கி தான் அந்த மெஷின்களுக்கு பொறுப்பெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன் என்றால் ஆமாம். இந்த நிலையில் பிரதிவாதிகள் அனைவரும் வாதிக்கு வாடகையை கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

14. வாதி இழப்பீட்டுத் தொகையை கொடுத்த பின்பு உங்கள் மெஷின்களை எடுத்துச் செல்லுங்கள் என்று தான் குறிப்பிட்டு சொல்லி இருந்தாரே தவிர தடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கட்டிடத்தை நல்ல முறையில் ஒப்படைத்து விட்டு செல்ல வேண்டும் என்று தான் ஒப்பந்த பத்திரத்தில் காணப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

15.மேற் மேற்கண்ட நிட்டிங் மிஷின்களை வைத்து வியாபாரம் செய்து லாபம் அடைந்திருக்கிறேன் என்றும் அதன் பின்பு எதிர்பாராத விதமாக தீப்பற்றிக் கொண்டது என்று நான் சொல்லி இருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பாதிக்கு நான் வாடகை கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்று என்னுடைய வழக்கில் ஏற்றுக்கொண்டு விட்டு தற்போது சாட்சியத்தின் போது எந்த கடமையும் எனக்கு இல்லை என்று நான் சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

16. வங்கி தான் வாடகை கொடுக்க வேண்டும் என்று நான் சொல்வதும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல. நான் கட்டிடத்தை வாடகை எடுத்ததெல்லாம் ஒப்புக்கொண்டு தற்போது வாடகை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்வது சட்டப்படி

ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மின்சார கட்டணத்தையும் நாங்கள் உபயோகப்படுத்திய வரை நாங்கள் தான் செலுத்த வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

17.எங்களுடைய முன்பணம் அங்கு இருப்பதால் அதனை வைத்து செலுத்திக் கொள்ள வேண்டியது என்றால் சரியல்ல. நான் சொல்லும் பொருட்கள் ஏற்றுக்கொள்ள ஏற்றுக்கொள்ள தக்கவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் மற்ற பிரதிவாதிகளை நான் விசாரிக்க போகிறேன் என்று கேட்டால் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை நானே மேற்பார்வை செய்து வருவதால் நானே சாட்சியளித்து விடுவேன். என்னுடைய சாட்சியமும் நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களும் சட்டப்படி ஏற்றுக்கொள்ள தக்கவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. கந்தபிரபு உடன் மட்டும் தான் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. நான்தான் வழக்குக்காக காகவும் கடன் வாங்குவதற்காகவும் புவனேஸ்வரி மற்றும் ஹேமலதா ஆகியோருடன் ஒப்பந்தம் செய்ததாக சொல்லி போய் வழக்காடுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.02.26 19:32:42 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.